ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

धत्से त्वं करुणापयोधिरिति यामाख्यां त्रिलोकोज्ज्वलां
तस्यास्स्यात् फलमेतदेव मृड यन्निर्हेतुकं पालनम् ।
मादृक्षेषु जनेष्वनन्यशरणेष्वीशाशु तां ते कृपां
कृत्वा सार्थनिजाभिधो भव न चेद्व्यर्थैव सा स्यात्तव ॥

தத்ஸே த்வம் கருணாபயோதிரிதி யாமாக்யாம் த்ரிலோ
கோஜ்ஜ்வலாம் தஸ்யாஸ்ஸ்யாத் பலமேததேவ ம்ருட யந்நிர்ஹேதுகம் பாலநம் । மாத்ருக்ஷேஷு ஜநேஷ்வநந்யஶரணேஷ்வீஶாஶு தாம் தே க்ருபாம் க்ருத்வா ஸார்த்தநிஜாபிதோ பவ ந சேத்வ்ருதைவ ஸா ஸ்யாத்தவ ॥

ஹேம்ருட! ஸகல ஜனங்களுக்கும் சுகத்தைக் கொடுக்கும் சக்தி வாய்ந்த ஹே சந்திரசேகர! மூன்று உலகங்களிலும் மிகப் பிரஸித்தியாய் பிரகாசிக்கின்றதான கருணைக்கடல் என்கிற யாதொரு பெயரை நீர் வஹிக்கிறீரோ அதற்கு யாதுபயன் என்றால் ஒருவிதமானஸாதனத்தையும் எதிர்பாராமல் காரணமின்றித் தன்னையடைந்தவர்களைப்பாதுகாப்பதேயாகும். ஆகையால் வேறு யாதொரு கதியுமில்லாமல்மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு திண்டாடும் எம்போன்ற ஜனங்களிடம் அந்த உமது கிருபையைச் செய்தால் பொருளுடன் கூடிய பெயரையுடையவராக ஆவீர். அவ்விதம் செய்யாவிட்டால் கருணைக்கடலென்கிற மிகவும் மஹிமைபெற்ற அப்பெயர் உமக்கிருப்பது பயனற்றதாக முடியும்.

ஹேபரமேசுவர கருணாநிதிஎன்கிறபெயர்உமக்கேற்பட்டிருக்கின்றது. அப்பெயரின் கருத்தென்னவென்றால் தம்மை அண்டினவர்களை யாதொரு ஸாதனத்தையும் எதிர்பாராமல் காரணமின்றிப் பாதுகாப்பதேயாகும். அவ்விதமில்லாமல் கர்மா உபாஸ்தி ஞானம் முதலான மோக்ஷத்தைப் பெறுவதற்குற்ற ஸாதனங்களைப்பெற்றவர்களை ரக்ஷிப்பது கருணையாலென்றுசொல்லவியலாது. எம்போன்ற சிலர் ஒரு ஸாதனமில்லாதவர்களாயிருப்பதால் ஒருவரும் ரக்ஷிக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் இவ்விதம் யாதொரு அவலம்பமில்லாமல் வருந்தும் ஜனங்களைப் பரிபாலிப்பதே உமது கருணைக்கு முக்கியமான பயனாகும். ஆகையால் எங்களை ரக்ஷித்து உமது பெயரை விட்டுவிடாமல் ஸ்தாபித்துக்கொள்ளுமென்று ஒரு பக்தர் பகவானிடம் வேண்டுகிறார்.

சுபம்!

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

பிரபவ-ஹு தை-மீ ௨௰௳


டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி கொண்டுவரப்போகிற

# விவாஹ வயது மசோதா கண்டனம்.

(12-வது பக்கத்தொடர்ச்சி)

தற்காலம் இவர்களாக வெளியிலிருக்கும் காபி முதலியவைகளைப் போட்டுவதால் இவ்வளவுதான் வேணுமென்கிற நிதானம் தெரியாமல்இவர்கள் இஷ்டப்படிபலாத்காரமாகவயிறுபுடைத்துக் காட்டுகிற வரையில் போட்டுகிறபடியால் அதனால் ரோகம் வாராமல் எப்படியிருக்கும் **अजीर्णे भोजनं विषं** அஜீர்ணே போஜநம் **விஷம்** ஜீர்ணமாகாமலிருக்கும்படி அதிகமாகக் கொடுக்கப்படும் ஆகாரம் விஷமாகிறது. அதாவது விஷம் சரீரத்திற்கு எவ்வளவு கெடுதியையுண்டுபண்ணுமோ அவ்வளவு கெடுதியை அளவுக்கதிகம் புசிக்கும் போஜனமும் உண்டுபண்ணுமென்று பெரியோர் கூறியிருக்கிறார். ஆகையால் கெட்டுப்போன பால்களை வாங்கிக் காபிபோட்டு பலாத்காரமாய் தங்களிஷ்டப்படி குழந்தைகளைஅமிக்கிக்கொண்டு அதிகமாகப் போட்டுவதாலேயே சொல்லவொண்ணாத வியாதிகளும் அவைகளால் சரீரத்திற்குக் பலக்குறைவும் அகாலமரணம் அதிகமாகவும் எற்படுகின்றதேயன்றி இதற்குக் காரணம் பால்ய விவாஹமாகமாட்டாது.

இந்தமாதிரியான பால்ய விவாஹத்தையே அனுஷ்டித்து வந்த முன்காலத்திலுள்ள ஸ்திரீகளுக்குண்டான குழந்தைகள் மாத்திரம் கஷ்டக்கு முஷ்டக்கென்று எப்படியிருந்தது. அதே பால்யவிவாஹத்தை இப்போதும் நடத்துகிறார்களே தவிர வேறு விதமல்ல. ஒரு ஸமயம் முன்காலத்தில் 10-வயதிற்குள் ஸ்திரீகளுக்கு அவசியம் விவாஹம் செய்கிறதென்கிற நியமமும் இருந்ததாகவும் தெரிகின்றது. இக்காலத்தில் ஜனங்களுக்கேற்பட்ட எழ்மைத்தனத்தாலும் வரதக்ஷிணையின் ஆதிக்கத்தாலும் 12 13 14வய

தான பிறகும் சில ஸ்திரீகளுக்கு விவாஹம் நடைபெறுகின்றது. இதைப்பார்த்தால் முன்காலத்தைப் போல் அவ்வளவு நியமமாக நடைபெறவில்லையென்று தோன்றுகின்றது. பால்ய விவாஹத்தையே நடத்துகிறதென்கிற நியமத்துடன் தவறாமல்நடத்திவந்த முன்காலத்திலுண்டான குழந்தைகள் ஒருவித ரோகமின்றி நிறைந்த ஆயுளுடன் பலமுள்ளதாக இருந்திருப்பதையும் தற்காலம் அவ்வளவு நியமமில்லாமல் நடந்தாலும் உண்டாகும் குழந்தைகள் மாத்திரம் அதற்கு மாறுதலாயிருப்பதற்கு யாது காரணமென்று அறிஞர்கள் சற்று ஆலோசனை செய்தால் எம்மால் கீழ் கூறப்பட்ட காரணமின்றி இவர்கள் கூறும் காரணம் அற்பமேனும் பொருந்தாதென்று நன்கு விளங்கவில்லையா. ஆகையால் இந்தப்பயனும் இதினால் எதிர்பார்க்கமுடியாது.

முடிவில் வரதக்ஷிணை நிற்பந்தம் குறையுமென்று சொல்லப்பட்டது. அதுவும் சரியல்ல.

தற்காலம் நடக்கும் விவாஹகாலத்திற்கும் இவர் கூறும் காலத்திற்கும் 2, 3, வருஷகாலம்தான் அதிகமாக இருக்கின்றது, 8-வது வயதுமுதல் ருதுவாகிறதற்குமுன் வரையில் மூன்று வருஷத்துக்குக்குறைவில்லாமல் 4, 5 வருஷகாலம் அவகாசமிருந்தும் அந்த ஸமயங்களில் குறைவடையாத வரதக்ஷிணை பின்னும் இரண்டு வருஷம் தாமதித்தால் எப்படிக்குறையுமென்று தோன்றவில்லை. ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்யவேண்டுமென்கிற எண்ணமிருந்தால் எப்பொழுது செய்தாலும் இந்த நிர்பந்தம் உண்டுதான். இது விலகவேண்டுமானால் நமக்குள் ஒற்றுமை ஏற்பட்டு இனி நாம் ஒருவரும் இந்தக்குரூரமான வரதக்ஷிணையை வாங்குகிறதில்லையென்று தீர்மானம் செய்துகொண்டு அவ்விதமே கட்டுப்பாடாக விவாஹங்களை நடத்தினால் மாத்திரம் அந்த நிர்ப்பந்தம் விலகுமேயல்லாமல் பால்யவிவாகத்தை நிறுத்துவதால் குறைந்துவிடுமென்று எவரும் எதிர்பார்க்கமுடியாது.

பின்னும் முன்காலங்களில் ஸரியானகாலங்களில் மழைபெய்துமைற்றஸௌகர்யங்களும் கிரமமாக ஏற்பட்டுக்கொண்டிருந்தபடியால் தேசத்தில் சேஷேமம் ஸரியாயிருந்து ஜனங்களுக்கும் ஸௌக்கியமேற்பட்டு ஸ்திரீகளும் 15, 16 வயதானபிறகு ருதுவாகிக் கொண்டு வந்தார்கள். அதினால் அக்காலத்தில் பால்ய

விவாஹத்தால் அதிக தோஷமேற்படவில்லை இந்தக்காலத்தில்ஸரியானமழையில்லாதபடியால் அதிக உஷ்ணமேற்பட்டு அதினால்பல விதமான கஷ்டங்களையும் அடைகிறோம். இந்த உஷ்ணாதிக்கத்தால் இந்தக் காலத்திய ஸ்திரீகள் 10, 11 வயதிற்குள் ருதுவாகிவிடுகிறார்கள். உடனே சாந்தி பண்ணினால் பல சங்கடங்கள் நேருகின்றன. ஆகையால் விவாஹத்தை 15-வயதிற்குமேல் செய்தால் இந்த ஆபத்துக்கள் நேராது என்றும் ஸ்ரீ ஹரிவிலாஸ்சாரதா ஸ்ரீ முத்துலக்ஷ்மி முதலியவர்கள் கூறுவதாகவும்கேழ்விப்படுகிறோம்.

இதுவும் சரியல்ல:— இவர்கள் கூறுவதை அங்கீகரித்தால் ருதுமதி விவாகம் செய்யவேண்டுமென்று ஏற்படுகின்றது. அவ்விதம் செய்வது நம் சாஸ்திரங்களுக்கு நேர் விரோதமென்றும் அதினால் பலகஷ்டங்கள் நேருமென்றும் முன் நம் ஆர்யதர்மத்தில் பன்முறை விரிவாய் எம்மால் வெளியிட்டிருப்பதை நேயர்களறிந்திருக்கலாம்.

அன்றியும் இவர்கள் சொல்லுகிறபடி 11-வயதில் ருதுவாய் 12-வயதில் சாந்திக் கல்யாணம் செய்தால் உடனே கர்ப்பம் ஏற்பட்டுவிடுகிறதென்று எப்படி நிச்சயிக்க முடியும். எத்துணையோ ஸ்திரீகள் குழந்தைகளேற்படாமலிருக்கிறார்கள். அவ்விதமேற்பட்டாலும் யாதொரு ரோகமுமில்லாமல் தாயாரும் குழந்தையும் ஸௌக்கியமாயிருக்கும். கோடிக்கணக்கான ஜனங்களைப் பார்க்கலாம்.

மேலும் காலதோஷத்தால் 10, 11 வயதில் ருதுவாகும் ஸ்திரீகள் மிகவும் குறைவாயிருக்குமேயல்லாமல் அதிகமாயிருக்குமென்று கூறவியலாது 100-க்கு 10 ஸ்திரீகள் இவ்விதமிருப்பதைக் கொண்டு அநாதிஸித்தமான வைதிக ஆசாரத்தை அடியோடு மாற்ற முன்வருவது அறிஞர்களுக்கழகா.

பின்னும் 11-வயதில் ருதுவாகும் ஒரு ஸ்திரீயை 4, 5 வருஷ காலம் வைத்திருந்தால் அதினால் எதிர் பாராதகஷ்டங்கள் பல ஏற்படுமென்பதை என் இவர்கள் கவனிக்கவில்லையோ தெரியவில்லை.

ஆகையால் இவர்கள் கூறும் காரணங்கள் யாவும் உபயோகமற்றவைகளென்று எவரும் கருதக் கூடியதே.

இதுவரையில் டாக்டர் முத்துலக்ஷ்மி முதலானவர்களால் கொண்டு வருவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் மசோதாவினுல் எவ்விதப் பிரயோஜனங்கள் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றனவோ அவைகளில் ஒன்றுவது கிடைக்காதென்று நன்கு நிரூபித்தாய் விட்டது. இனி அதினுல் ஏற்படும் கஷ்டங்களையும் கவனிப்போம்.

1. இந்தக் கார்யம் இந்துக்களுக்காக ஏற்பட்ட தர்மசாஸ்திர விதிகளுக்கு நேர் விரோதமாகும்.

2. இந்த மசோதாப்படி ஒரு துவிஜன் விவாகத்தைநடத்துவானேயாகில் அவன் தம் ஜாதி வர்ணாச்ரமங்களுக்குற்ற வைதிக தர்மங்களை அனுஷ்டிப்பதற்கு அருகமில்லாதவனுகவும் கொடிய பாபத்திற்குள்ளாகி பரலோகத்தில் விசேஷமான நரகத்திற்கும் ஆளாகிறுர்கள்.

3. ருதுமதீ விவாகத்திற்கு எவ்வித தோஷம் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றதோ, அந்த தோஷம் இதினுலும் ஏற்பட நியாயமுண்டு.

4. 11-வது வயதில் ஒரு கன்னிகை ருதுமதியாக ஆய்விட்டாளேயானுல் அவளை 3,4 வருஷகாலம் வரை யாதொரு தோஷத்திற்கும் பாத்தியப்படாமல் பாதுகாப்பது மிகவும் சிரமமாகும்.

5. மிகவும ஏழ்மைத்தனத்திலிருக்கும் ஒருவன்பிறரிடம்யாசகம் வாங்கிக் கல்யாணம்செய்யுங்கால் 10-வயது12-வயதுள்ள இரண்டுகன்னிகைகளுக்கும்சேர்த்து விவாகத்தைநடத்தினுல்அவனிருக்கும் சிரமதசைக்கு எவ்வளவோ சௌகரியமாயிருக்கும். இந்தமசோதாபாஸானுல் 12-வயதிற்கோஅல்லது 14-வயதிற்கோ மேலுள்ள வயதை அடைந்த பெண்களை மாத்திரம் சேர்க்க முடியுமேயல்லாமல் மசோதாவில் குறிப்பிடும் வயதிற்குக் கீழான வயதிலிருக்கும் கன்னிகைக்குச் சேர்த்து விவாகம் நடத்தமுடியாது. இந்த நிர்பந்தத்தால் எவ்வளவு ஏழை ஜனங்களுக்கு எவ்வித கஷ்டங்கள் நேருமென்பதை யாரால் கூறமுடியும்.

6. ஒருவன் அதிகவயதாகி ரோகத்தாலும் பீடிக்கப்பட்டு இனி நம் சரீரம் அதிககாலம் இருப்பதற்கு நியாயமில்லை என்று தன் அனுபவத்தாலும் வைத்தியர்கள் சொல்லாலும் நன்கறிந்து கொண்டு 10-வயதிலிருக்கும் தன் குமரிக்கு விவாகத்தைத்தானே

சீக்கிரம் செய்யவேண்டுமென்று முயற்சித்தால் அவனைச் செய்யக்கூடாதென்று இந்த மசோதாத்தடுக்கும். அந்த ஸமயத்தில் ரோகியான அப்பெண்ணின் பிதா நம் குழந்தையை நல்ல இடத்தில் நாமே இருந்து விவாகம் செய்துகொடுக்கவில்லையே. எவ்விதகஷ்டத்தை நம் குழந்தை அடையப்போகிறளோ என்கிற அதிகமான மனவருத்தத்துடன் இறப்பதைத் தவிர வேறுகதியில்லை.

பின்னும் இதினல் பரிஹாரம் செய்ய முடியாத பெரிய ஆபத்தும் நேர நியாயமுண்டு. அஃதாவது ஒருவன் தன் பெண்ணுக்கு மசோதாவில் கூறிய ஸரியான வயது வந்துவிட்டதென்று விவாகம் நடத்த வேண்டி ஸகல காரியங்களையும் செய்து மறுநாள் முகூர்த்தம் நடக்கவேண்டிய ஸமயத்தில் அவனுக்கு விரோதியான அயல் வீட்டுக்காரனெருவன் இந்தப்பெண்ணுக்கு இன்னும் ஸரியான வயது வரவில்லை அவன் வீட்டில்வேறுகல்யாணம் நடக்கிறபடியால் செலவு லாபமாகுமென்று நினைத்து இதையும் சேர்த்து செய்கிறன். இவன் செய்வது மேலுக்கு விரோதம் என்று கவுண்மெண்டுக்கு அறிவித்தால் உடனே அந்தப் பெண்ணைப் பரிசோதிக்க வரவேண்டும் அதுவும் டாக்டர்களைக்கொண்டு தான் ஆகவேண்டும். அவர்கள் வந்தாலும் 12-வயதாக வேண்டுமென்று ரூல் இருந்தால் 11-வயது 6-மாதம் தான் ஆகியிருக்கிறது. 12-வயது பூர்த்தியாகவில்லை என்று ஆக்ஷேபமிருந்தால் அது ஸரி அல்லது பிசகென்று இவர்களால் எப்படிக் கண்டு பிடிக்கமுடியும். சில சரீரங்களின் அமைப்பு அதிகவயதானலும் குறைத்துக் காட்டும். சில குறைந்த வயதுள்ளவளாயிருந்தாலும் பார்வைக்கு அதிகம் தோன்றும் அதிலும் 6-மாதத்திற்கு9மாதம் என்கிற வித்தியாஸத்தை எப்படிக் கண்டு பிடிக்கமுடியும். அந்தப் பெண்ணின் ஜனனகால ரிஜிஸ்தரை வாங்கவேண்டும். அந்தக்கணக்கை ஸமீபமாயுள்ள தாலூகா ஆபீஸில் வாங்கினலும் அது வேறு பெண் 6-மாதம் இருந்து இறந்துபோய்விட்டது அதற்குப்பிறகு இந்தப்பெண்உண்டானதென்று விரோதிகள் பலவித ஆக்ஷேபங்களைச்செய்வதற்குண்டு பெண்களுக்குகல்யாணம்செய்யமுயற்சிக்கும் ஒரு பிதா இவ்வளவு வியவகாரங்களுக்கும் ஆளாகி கல்யாணத்திற்கு வேண்டிய கிரமமான செலவையே செய்ய சக்தியில்லா

மல் திண்டாடும்பொழுது இந்தமாதிரி அனுவசியமான சிலவும் கல்யாணச் சிலவிற்குமேல் நேர்ந்தால் அவன் சொல்லமுடியாத கஷ்டங்களுக்குள்ளாவதைத் தவிர வேறு என்ன செய்யவியலும் ஏதோ சிலவைகளை மாத்திரம் இங்கு நிரூபித்தோம். இவைபோல் புத்திமான்களால் இன்னும் பல கஷ்டங்கள் நேருமென்று நிரூபிக்க முடியும். ஆகையால் இந்த மசோதாவால் அற்பமேனும் ஸாதகமில்லாவிட்டாலும் பாதகம் நிச்சயமாய் ஏற்படும் என்பதில் சந்தேகமே இல்லை.

மேலும் உலகில் பல ஜாதிப்பிரிவுகளும் அநேக மதக்கொள்கைகளுமிருக்கின்றனவென்பதும் பிரஸித்தமே. அவைகளில் ஒவ்வொரு ஜாதியாரும் தாங்கள் நடத்திக்கொள்ளவேண்டிய விவாகம் முதலியகார்யங்களைத் தன் மதக்கொள்கைப்படிக்கும் தங்கள் முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த முறைப்படிக்கும் நடத்தி வருகிறார்கள். இவ்விதம் நடத்தும் விவாகம் முதலிய காரியங்களில் பற்பல வேற்றுமைகள் இருக்கலாம். அவ்விதமிருந்தாலும் அதை பிறமதஸ்தர்களும் அங்கீகரிக்கிறார்களேயல்லாமல் அதைப்பற்றியொன்றும் கூற முன்வருகிறதில்லை. இவ்விதம் நடைபெறும் விவாகங்கள் சில ஜாதிகளில் ருதுவானபிறகும் சில ஜாதிகளில் 17, 18-வயதான பிறகும் விவாகத்தை ஸ்திரீகளுக்கு நடத்திவருகிறார்கள். ருதுவாகிறதற்குள் ஸ்திரீகளுக்கு அவச்யம் விவாக கர்மாவை நடத்த வேண்டுமென்று முக்கியமாய்க் கூறும் பிராமணர்களும் இவர்கள் நடத்தும் ருதுமதி விவாகத்தையும் அவர்கள் வழக்கம அப்படித்தான் அவர்களுக்கு அது பாதகமில்லை என்று திருப்தியாய் அங்கீகரிக்கிறார்கள். இந்தமாதிரி நடத்துகிறவர்களுக்கு டாக்டர் முத்துலக்ஷ்மி கொண்டு வருவதாகக் கருதும் இந்த மசோதாவினால் யாதொரு பாதகமுமில்லை.

பின்னே பிராமணர்களுக்கு முக்கியமாயும் மற்றும் சிலஜாதியாருக்கும் இந்த மசோதா பாஸானால் பல கஷ்டங்களும் அந்த ஜாதியையே அடியோடு கெடுப்பதற்கு இது முக்கிய காரணமாகவும் ஆய்விடும்.

அந்தந்தஜாதி வர்ணாச்ரமங்களுக்குத் தகுந்தபடி மதஸம்பந்தமான விவாகம் முதலிய கர்மாக்களை இன்னஸமயம் இன்னார் இவ்விதம் இந்தக் கர்மாவைச் செய்யவேண்டுமென்று மிகவும்கருணை

யுடன்அறிவாளிகளான மனு யாக்ஞயவல்கியர் முதலானஅநேக மஹரிஷிகளால்இதற்கென்றுஎழுதப்பட்டபலஸ்மிருதிகளில்ஸ்பஷ்டமாயிருக்கும் விஷயங்களை அவர் சொல்லியிருப்பது ஸரியல்லவென்றும் வேறுவிதம் நடத்தவேண்டுமென்றும் கூறுவதற்கு இவர்கள் முன் வரலாமா? மஹரிஷிகளின் அபிப்பிராயம் ஸரியல்லவென்று சொல்வதற்கு இவர்கள் அதிகாரிகளாவார்களா? எந்த விஷயத்தில் அவர்கள் வாக்கை புறக்கணிக்கத் தங்களுக்கதிகாரம் இருக்கென்பதை என் இவர்கள் சற்றுகவனிக்கக்கூடாது? பொது ஜனங்களாலும் அரசாங்கத்தாலும் டாக்டர்முத்துலக்ஷ்மி முதலானவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மிகவும் கௌரவம் பொருந்திய மெம்பர் ஸ்தானத்தை ஜனங்களுடைய க்ஷேமத்திற்குஉலகில் நடைபெறவேண்டிய காரியங்களைக் கவனிக்கும்படி கொடுத்திருக்கிறார்களா? அல்லது ஸ்ரீ பகவனுடைய ஆக்ஞா ரூபங்களாய் விளங்கும் சுருதிஸ்மிருதிகளின் விதியைஅனுஸரித்துஅனாதிகாலமாய் அனுஷ்டானத்தில் நடைபெற்றுவரும் வைதிகமான விவாகம் முதலான காரியங்களை தமக்குத் தோன்றியபடி மாற்றி ஜனங்களுக்கு அதிகமான கஷ்டத்தைக் கொடுக்கவேண்டியா? இதற்கு முன் இந்த சட்டசபை இல்லையா? அதில் மிகவும் புத்திசாலிகளான எவ்வளவு மெம்பர்களில்லை? அந்தக் காலத்திலும் இந்த பால்ய விவாகம் நடைபெறவில்லையா? அக்காலத்திலும் இந்த பால்ய விவாகம் நடைபெற்றாலும் இதினாலுண்டாகும் தோஷங்களை நன்கு அவர்கள் அறியவில்லையா? தற்காலத்திலுள்ளவர்களுக்கு மேல் இன்னும் அதிகமாக அறியக்கூடியபுத்திசக்தி அவர்களுக்கும் இருந்ததென்பதில்சந்தேகமேயில்லை.அப்படியிருந்தும் இந்தமாதிரிகாரியங்களிலுள்ள தத்வத்தைநன்கறியக்கூடிய சக்தி நம் புத்திக்குப் போதாது. அதில் மஹரிஷிகள்தான் சிறந்தவர்கள் அவர்கள் தம் ஞானதிருஷ்டியால் நன்கு தர்மதத்வத்தையறிந்து ஜனங்களுடைய க்ஷேமத்திற்கு யோக்கியமாக ஸ்மிருதிகளில் வியவஸ்தை செய்திருக்கிறார்கள்.அதைஅவ்விதமே நாம் அனுஷ்டிக்க வேண்டியவர்களேயல்லாமல் வேறுவிதம் அதில் செய்ய நமக்கதிகாரமில்லை என்கிற நிச்சயமான எண்ணங்கொண்டு மாத்திரம் அதை ஸரியாய் பரிபாலித்து வந்தார்கள்.

இந்த அபிப்பிராயத்தைக் கொண்டுதான் மாக்ஷிமை பொருந்திய கனம் விக்டோரியா மஹாராணி அவர்களும் மதஸம்பந்த

மான விஷயங்களில் தாம் தலையிடுவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளை யொன்றையும் சற்றும் கவனியாமல் தங்களிஷ்டப்படி எல்லாம் மசோதாவைக் கொண்டுவந்து ஸநாதன தர்மத்திற்கும் அதை அனுஷ்டிப்போர்களுக்கும் அதிகமான கஷ்டத்தையுண்டுபண்ணுவதுதானா லோகக்ஷேமமான காரியம். இனியாகிலும் சட்டசபையில் மெம்பர்ஸ்தானத்தை வகிக்கும் மெம்பர்கள் தயவு செய்து மதஸம்பந்தமான காரியங்களைச் சீர்திருத்த முன்னுக்கு வாராமல் அவைகளை விட்டுவிட்டு உண்மையில்ஜனங்களுக்குக்ஷேமத்தையுண்டுபண்ணக்கூடிய காரியங்கள்எவைகளோ, எந்தக்காரியத்தை நடத்தினால் பொது ஜனங்கள் திருப்தியடைவார்களோ, எவ்விதக்காரியங்களைச் செய்யவேண்டுமென்று பொதுஜனங்களாலும் கவர்ன்மெண்டாராலும் இவர்களுக்கு சட்டசபையில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த மாதிரி காரியங்களையே கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். காருண்யமுள்ள நம் கவர்ன்மெண்டார் அவர்களும் சட்டசபை மெம்பர்களால் அடிக்கடி மதஸம்பந்தமானவிஷயங்களை ஸபைக்குக் கொண்டுவந்து பொது ஜனங்களுக்கும் கவர்ன்மெண்டுஅதிகாரிகளுக்கும் அதிக கஷ்டத்தைக் கொடுக்கிறபடியால் தற்காலம் வரப்போகிறதாக வெளியிட்டிருக்கும் பொதுஜனங்களுக்கு அதிலும் பிராமண ஜாதிக்கு விசேஷகஷ்டத்தையுண்டுபண்ணக்கூடிய தான விவாஹவயது மசோதாவை சட்டஸபையில் நுழையாமலிருக்கும்படி செயவதோடு, இனியும் இந்தமாதிரி மதவிஷயமான மசோதாக்களை ஒருவரும் கொண்டுவரக் கூடாதென்று ஒரு உத்திரவு பிறப்பித்தால் பொது ஜனங்களுக்கு இனி இந்தமாதிரிக் கவலைக்கு இடமில்லாமலிருக்கும். ஆகையால் அவ்விதம் செய்யவேண்டுமென்று நமது காருண்யமுள்ளகவர்ன்மெண்டாரைநான் பன்முறை பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்வதுடன் மற்றுமுள்ள நகர கிராமவாஸிகளான ஸகல ஜனங்களும் தாமதிக்காமல் இவ்விதமே சீக்கிரம் கவர்ன்மெண்டுக்கு தெரிவித்துக்கொள்ளும்படியாகவும் கேட்டுக்கொண்டு இந்த விஷயத்தையும் முடித்துக்கொள்ளுகிறேன்.

சுபம் !

உப-பத்திராதிபர்,

# தீக்ஷிதமஹாஜனஸமுதாய ஸபை, சிதம்பரம்.

1928-ஷு ஜனவரி-ீ 22உக்கு பிரபவ-ஷு தை-ீ 9உ பானுவாரம் பகல் 3-மணிக்கு சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர்கோவில் ஆயிரக்கால் மண்டபத்தில் விவாஹவயதுநிர்ணயமசோதா விஷயமாய்க்கூடியமீட்டிங்கில்காரியதர்சியால்பிரும்மஸ்ரீமகாமஹோபாத்யாய சிவ-தண்டபாணிஸ்வாமிதீக்ஷிதர் அவர்களே அக்ராஸனாதிபதியாக வீற்றிருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு சிற. பொற. குப்புஸ்வாமிதீக்ஷிதர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது. பிறகு அக்ராசனாதிபதி பேசியதாவது —

சமீபகாலத்தில் சென்னை சட்டசபையிலும் டில்லி சட்டசபையிலும் கொண்டுவரப்போகிற விவாஹவயதுமசோதாவானது நமது தேசத்திலுள்ள ஆஸ்திகமஹாஜனங்கள் அனைவர்களுக்கும் வைதிகமார்க்கத்திற்கும் லௌகிகமார்க்கத்திற்கும் முற்றிலும் விருத்தமாக இருப்பதுடன் நமது தேசத்திற்கு விசேஷத்தீமையையும் உண்டாக்கக்கூடியதாகவிருப்பதால் அந்த மசோதாக்களை அங்கீகாரம் செய்யாமலிருக்கும்படி சென்னை கவர்னர் அவர்களுக்கும் இந்திய வைசிராய் அவர்களுக்கும் நாம் அனைவரும் சேர்ந்து மஹஜர்நாமா செய்துகொள்ளவேண்டியதுடன் ஆங்காங்கு ஆஸ்திகர்கள் இதில் சிரத்தை எடுத்துக்கொண்டு மஹஜர் அனுப்பும்படி பேபர்கள் மூலமாக தெரிவிக்கவேண்டியது.

ஷை மசோதாவில் உள்ள விரோதங்களாவன:— பெண்களுக்கு 10-வயதிற்குள் விவாஹம் செய்யவேண்டுமென்றும், ப்ரௌடையானபிறகு விவாஹம் செய்யக்கூடாதென்றும் மனு, யாக்ஞவல்க்ய, பாராசரஸ்மிருதி முதலியவைகளில் சொல்லியிருப்பதால் 14-வயதிற்குமேல்தான் விவாஹம் செய்யவேண்டுமென்பது சாஸ்திரவிருத்தமென்பது எல்லோருக்கும் ஸ்பஷ்டமான விஷயமே.

ஆனால் இந்த மசோதாவைக்கொண்டுவருபவர்கள் சாஸ்திரங்களைவிட்டு சௌகர்யத்தை அனுசரித்தே சொல்லுவதாகத் தெரியவருவதால் அந்த சௌகர்யத்திற்கும் இது விருத்தமென்பதை எடுத்துக் காட்டுவோம். மனிதர்கள் அனைவர்களுக்கும் ஆடுமாடுகளைப்போல் தோன்றியபடி சம்பந்தம் ஏற்படக்கூடாதென்று வ்யவஸ்தையுடன் விவாஹமென்கிற கர்மம் ஏற்படுட்டிருக்கிறது. அது பால்யத்தில் நடந்தால் ஸ்திரீ புருஷர்களுக்கு மனம்

கட்டுப்பட்டுத் தன்னுடையதென்று அன்பும் நம்பிக்கையும் விருத்தியடையும். இல்லாவிட்டால் யுவாக்களுக்கும் யுவதிகளுக்கும் காமாதிரேகத்தால் ரஹஸ்யமாக சம்பந்தங்கள் ஏற்பட்டு விடும். காமமானது பிறகுவரும் நஷ்டத்தையும் புண்யபாபங்களேயும் பாராது. அப்படி நடப்பதால் ஸ்திரீகளுக்கு கர்ப்பம் உண்டாகுமேயானல் அந்த கெர்ப்பத்தை அழிக்க யத்தனிப்பார்கள். அழிக்காவிட்டாலும் அந்தப் புருஷனே நிச்சயிக்கமுடியாமல் "பண்டமோரிடம் பழியோரிடம்" என்றபடி நிரபராதியான ஒரு புருஷன் தண்டனைக்குள்ளாவான். அப்படிச்சம்பவிக்காமல் ஸ்திரீ புருஷர்களேக் காக்க போஷகர்களால் எப்படி முடியும்? அந்தப் பெண்ணிற்குத்தான் கதியென்ன? ரஹஸ்யமான ஸம்பந்தத்தினுல் சகுந்தளே அடைந்த கஷ்டங்களே நாம் சாகுந்தலத்தில் கேட்டதில்லேயா? இது நிற்க, சாஸ்திரத்திற்குப் பயந்து சில ஜனங்கள்ரஹஸ்யமாக விவாஹம் செய்வார்கள். அப்படிச் செய்யாதவர்களேயும் கூட அப்படிச் செய்ததாக பகையாளிகள் சொல்லி அவர்கள் பேரில் குற்றங்களேத் தொடர்ந்து கேசுகளே ஆரம்பிப்பார்கள். அதனுல் அனேகசாதுக்களுக்கு கஷ்டமும் நஷ்டமும் உண்டாகும். மேலும், விவாஹவயது விஷயமான தகாறுகள் வந்து, அதனுல் ஏற்படக்கூடிய வியவஹாரங்களும் அதிகப்படும். இப்படி நாம் எதிர்பாராமல் வரக்கூடிய வியவஹாரங்களேத் தீர்க்க இப்பொழுது இருப்பதைக்காட்டிலும் அதிக கோர்ட்டுகள்கூட ஏற்படுத்தவேண்டியதாகவிருக்கும்.

மேலும், இப்பொழுது புருஷர்கள் கஷ்டப்பட்டாவது ஸ்திரீகளே சுகமாகவிருக்கும்படி செய்வதும், தான் மானக்குறைவான காரியங்களேச்செய்தாவது ஸ்திரீகளே மானத்துடன் ரக்ஷிப்பதும், தான் அதிகக் கடன்பட்டாவது பெண்களே நல்ல இடம் பார்த்து விவாஹம் செய்துகொடுப்பதுமே வழக்கத்திலிருக்கிறதேதவிர, தன்னுடைய சுகத்தையும் லாபத்தையுமே கருதி பெண்களே கிரயத்திற்கு விற்கவில்லேயே! இந்த பாகங்களே அந்தப்பெண்மணிகளே ஆலோசித்துப்பார்த்தால் இந்த மசோதாவைக் கொண்டு வரக்கூடியவர்களேக் கொண்டுவரவேண்டாமென்று நயந்து கேட்டுக்கொள்ளலாமே! மேலும் சாஸ்திரத்தைவிட்டுப் பேசுபவர்கள் எந்தவயதில் வேண்டுமானுலும் விவாஹம்செய்துகொள்ளட்டுமே?

எந்த வயதில் வைதவ்யம் வந்தாலும் மறுவிவாஹம் செய்துகொள்ளட்டுமே. ஆகவே இந்த மசோதாவினல் அவர்களுக்கு ஆக வேண்டியதென்ன? அவர்களைத் தடுப்பார் யாருமில்லையே! சாஸ்திரங்களை உல்லங்கனம் செய்து ஸாதுக்களைக்கெடுக்கும் பாபத்திற்குமாத்திரம் பாத்யப்படுவானேன்! பால்யவிவாஹம் செய்து பால்யத்தில் கர்ப்பம உண்டாகி ஜனித்த பலபேர்களை திருடசரீரர்களாகவும் இப்பொழுதும் பார்க்கிறோம். 20-வயதிற்குமேல் கர்ப்பம் தரித்து ஜனித்த அநேகம்பேர்களை துர்பலர்களாகவும் காண்கிறோம். பால்யத்திலேயே விவாஹம் ஆனபோதிலும் வெகுகாலம் வரை கர்ப்பம் தரிக்காமல் பின்பு கர்ப்பம் தரித்தவர்களையும், நாம் கண்டிக்கிறோம். இதற்கு 12-வயதுள்ள ஸ்ரீ ராமனை 8-வயதுள்ள ஸீதாதேவியானவள் விவாஹம் செய்துகொண்டு பகுகாலத்திற்கு பின்பு, குசலவர்களை கர்ப்பம் தரித்ததாக திருஷ்டாந்தத்தை நாம் அறியவில்லையா? ஆகையால் கர்ப்பம் தரிப்பதும் சிசுவிற்கு பலாபலம் உண்டாவதும் அவரவர்கள் புண்யபாபங்களை அனுசரித்தேயிருக்கிறது. இதைக்கூட நமது புருஷகாரத்தினல் மாற்ற யத்தனிப்பது பெருத்த சாஹஸமாகும். அப்படி பால்யத்தில் வைதவ்யம் வரவேண்டுமென்ருவது சிசுக்களுக்கும் மாதாக்களுக்கும் பலக்குறைவு எற்படவேண்டுமென்ருவது பாபமிருந்தால் வ்யபிசாரதோஷத்தினுலாவது அது உண்டாகியே தீரும். அவர்களுக்குத் தண்டனை மாத்திரம் விதிக்கலாமே ஒழிய உண்டானதை உண்டாகாமலிருக்கச்செய்ய யாரால் முடியும்?

ஆகையாலிந்த மசோதாவில் முன் அபிமானம் வஹித்தவர்களும்கூட நாம் சங்கல்பித்தோம் என்ற அபிமானத்தை விட்டு இந்த மசோதாவை அங்கீகரிக்காமலிருக்கும்படி செய்யவேண்டுமென்றுகேட்டுக்கொள்ளுகிறோம். இந்தியர்களிடத்தில் கருணையுடைய கவர்மெண்டார் அவர்களுமிந்த மசோதாவையங்கீகரிக்காமலவசியம் விலக்கிவிடவேண்டுமென்றும் பன்முறை கேட்டுக்கொள்ளுகிறோம்.

மேற்கண்ட அக்ராசனதிபதியின் வார்த்தைகள் அங்கிருந்த ஆயிரக்கணக்கான ஆஸ்திகர்கள் அனைவராலும் ஏகமனதுடன் ஆமோதிக்கப்பட்டன.

இப்படிக்கு,

தீக்ஷிதமஹாஜனசமுதாய
சபை, சிதம்பரம்.

காரியதரிசி.